யிட்டபோது அளித்த கருத்தின்போது சொல்லப்பட்டது. உலக வங்கி இதற்காக எவ்வளவு பண உதவி செய்தது? உதவியிருக்கிற மொத்த தொகை எவ்வளவு? உதவி தருகிற காலத்தில் எந்தெந்த அடிப்படையில், எந்தெந்தக் கொள்கையின் அடிப்படையில் எவ்வளவு தரமுடியும் என்று கணக்கிடப் பெற்றது? கடைசியில் எவ்வளவு தொகை கொடுத்தார்கள்? அவர்கள் எதிர்பார்த்த அந்த முன்னேற்றம் ஏன் நடைபெறவில்லை, என்பதைதான் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அமைச்சர் அதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, மொத்தப் பணம் எவ்வளவு என்பதற்கு இங்கே தகவல் இல்லை. 1978–79, 1979–80-க்கு எவ்வளவு செலவு செய்ய இருக்கிறோம் என்பதை முன்னாலேயே குறிப்பிட்டேன். என்னென்ன காரணங்களுக்காக தடைபட்டு இருக்கிறது என்பதை அச்சிட்டே கொடுத்து இருக்கிறேன். அதைப் படிக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் எதிர் பார்க்கமாட்டார் என்று கருதுகிறேன்.

கோவையில் வீட்டுவசதித் திட்டங்கள்.

*வினா எண் 690—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோவை வீட்டுவசதி யூனிட் 1,232 வீடுகள் கட்ட திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காகும் செலவுத் தொகையாகிய ரூ. 2,92 கோடியில் நமது மாநில அரசின் பங்குத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோவை திட்டப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1,252 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டின் மொத்தத் தொகையில் மாநில அரசு 50 சதவிகிதம் அளிக்கிறது.

[முற்பகல் 10-00]

திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, திட்டம் இடம்பெற்றுள்ளது என்றுதான் இன்னும் அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். இந்த வகை அமைப்புத் திட்டத்தில் வீடு கட்டிக்கொள்வதற்காக ஏழை எளிய மக்கள் நிறைய பேர் வீடு இல்லாமல் காத்திருப்பதும் அமைச்சரவர்களுக்குத் தெரியும்.

1979 எப்ரல் 11]

ஆகவே, எந்தக் கால எல்லைக்குள் இந்த வீடு அமைக்கிற திட்டம் செயல்பட இருக்கும், வீடுகள் கட்டப்பட ஆரம்பிக்கும் என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர வர்களே, மொத்தம் 9 திட்டங்கள். சிங்காநல்லூர் தொழி லாளர்களுக்கு வீடுகள் கட்ட மொத்தச் செலவு 134·93 இலட்சம் ரூபாய். காலவரம்பு 3 ஆண்டுகள். குறிச்சி தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தர 101·20 இலட்சம் ரூபாய்; காலவரம்பு 3 ஆண்டுகள். பேரூர் சாலை வடக்கில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 13·17 இலட்சம் ரூபாய்; கால வரம்பு 2 ஆண்டுகள். பேரூர் சாலை தெற்கில் குறைந்த வருமானம் பெறுவோர்க்கான வீட்டுவசதித் திட்டம் 33.40 இலட்சம் ரூபாய்; கால வரம்பு 2 ஆண்டுகள். காவல்துறை அலுவலர்கள் தற்போது குடியிருக்கும் பகுதி களை மேம்படுத்துதல் (வணிக மையம் மட்டும்) 107·84 இலட்சம் ரூபாய்; கால வரம்பு 3 ஆண்டுகள். பெரிய குளம் பகுதியில் மொத்த வணிக அங்காடி மற்றும் வண்டி நிறுத்தும் இடம் 102·00 இலட்சம் ரூபாய், காலவரம்பு 3 ஆண்டுகள்; பொள்ளாச்சி சாலையில் துணை சரக்கு வண்டி கள் நிறுத்துமிடம் 55 இலட்சம் ரூபாய். காலவரம்பு 3 ஆண்டுகள். குறிச்சி குடிநீர் திட்டம் 56·30 இலட்சம் ரூபாய், காலவரம்பு 2 ஆண்டுகள். சிங்காநல்லூர் குடிநீர் திட்டம் 182·50 இலட்சம் ரூபாய், காலவரம்பு 2 ஆண்டுகள். ஆக 1977–78 ஆண்டிற்கான செலவுத் தொகை 292 இலட்சம் ரூபாய்; திட்டத்திற்கான மொத்தச் செலவு 786·34 இலட்சம். மாநில அரசின் பங்கு 393 இலட்சம்; அதாவது 50 சதவீதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 691—699 ஒத்திவைக்கப்பெறுகின்றன. வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(1) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி).

(ஆ) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

திரு. என். சங்கரய்யா: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இன்று தங்கள் கவனத்திற்கு ஒரு முக்கியமான பிரச்சினையைக் கொண்டுவர விரும்புகிறேன். 9-ம் தேதி அன்று சில எதிர்க் கட்சிகள் வெளி நடப்பு செய்த பிறகு இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் பேசினார். நாங்கள் அப்போது கேட் டோம். தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளின் கீழே அலுவல்